# UNIVERSITY OF PERADENIYA
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) – AUGUST 2015
ශාස්ත්‍රවේදි සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2015

ISLAMIC CULTURE I/ ඉස්ලාම් සංස්කෘතික I - (ICG I)

**(The Political History of Islam)**

இவ்வினாத்தாளில் மொத்தம் 08 வினாக்கள் உள்ளன. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். எழுத்து தெளிவில்லாவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

நேரம் : மூன்று (03) மணித்தியாலம்

---

01. உமையா ஆட்சியின் தோற்றம் பற்றி விளக்கி, கலீபா முஆவியா (ரழி) அவர்களது பணிகளை மதிப்பிடுக.

02. கர்பலா நிகழ்வுக்கான பின்னணியை விபரித்து, இஸ்லாமிய வரலாற்றில் அது ஏற்படுத்திய தாக்கத்தை ஆராய்க.

03. கலீபா வலீத் பின் அப்துல் மலிக் கால ஆட்சி வியாபகம் பற்றி விபரமாய் எழுதுக.

04. புவைஹ் சிற்றரசின் தோற்றம் பற்றியும் அப்பாஸிய கலீபா உடனான அதன் உறவு பற்றியும் விபரிக்குக.

05. அப்பாஸிய நிர்வாகத்துடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றை விபரிக்குக.
    a. நீதி நிர்வாகம்
    b. திணைக்களங்கள்
    c. இராணுவம்
    d. வருமானமும் செலவினங்களும்

06. முஸ்லிம் ஸ்பெய்னின் அபிவிருத்தியில் கலீபா மூன்றாம் அப்துர் ரஹ்மானின் பங்களிப்பை விபரிக்குக.

07. பைதுல் முகத்திஸை மீட்டெடுத்ததில் சுல்தான் ஸலாஹுத்தீன் ஐயூபியின் பங்களிப்பையும் அங்கு அமைதியை நிலைநாட்டுவதில் அவர் காட்டிய முன்மாதிரிகளையும் விளக்குக.

08. சிறுகுறிப்பு எழுதுக.
    a. ஹஜ்ஜாஜ் பின் யூசுப்
    b. அப்பாஸிய ஆட்சியில் பர்மகிகளின் செல்வாக்கு
    c. கலீபா மஃமூன்
    d. பக்தாத் நகராக்கம்

***********

# UNIVERSITY OF PERADENIYA
## පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
## දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
### GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015
### ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2015
### ISLAMIC CULTURE II/ ඉස්ලාම් සංස්කෘතික II - ( ICG II)
### (Fundamentals of Faiths and Sectional Development)

இவ்வினாத்தாளில் மொத்தம் **08** வினாக்கள் உள்ளன. எவையேனும் ***ஐந்து*** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். எழுத்து தெளிவில்லாவிடின் புள்ளிகள் குறைக்கப்படும்.

நேரம்: மூன்று (03) மணித்தியாலம்

---

1. சமூக மூலதனம் என்ற வகையில் ஸகாத்தின் அவசியத்தைக் குறிப்பிட்டு, அதன் சமூகப் பயன்பாட்டை விபரிக்குக.

2. கழா – கத்ர் கோட்பாடு பற்றிச் சுருக்கமாக விளக்கி, மனித செயற்சுதந்திரம் பற்றிய இஸ்லாமிய சிந்தனையைத் தெளிவாக எடுத்துரைக்குக.

3. தஸவ்வுப் கலை இஸ்லாமிய உலகில் தோன்றி வளர்ந்த பாங்கை விளக்கி, பிற்காலத்தில் அது நெறிபிறழ்ந்தமைக்கான காரணங்களை விமர்சன ரீதியாக ஆராய்க.

4. சிறுகுறிப்பு எழுதுக.
   a. இமாம் அபுல் ஹஸன் அஸ்ஸாதுலி (றஹ்)
   b. கத்முந் நுபுவ்வத்
   c. ரஸாஇல் இஹ்வானுஸ் ஸபா
   d. காரிஜீக்கள்

5. அஹ்லுஸ் ஷீஆ எனப்படுவோர் யாவர்? ஷீஆக்களின் கோட்பாடுகளைக் குறிப்பிட்டு, ஷீஆ - அஹ்லுஸ் ஸுன்னா இடையிலான வேறுபாடுகளை விபரிக்குக.

6. இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை ஏன் முக்கியம் பெறுகிறது என்பதையும், தௌஹீத் ஒரு மு∴மினின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் விபரிக்குக.

7. முன்மாதிரிமிக்க சமூகம் ஒன்றை உருவாக்குவதில் றிஸாலத்தின் அவசியத்தை பகுத்தறிவு ரீதியாக ஆராய்க.

8. “இஸ்லாமிய வணக்கவழிபாடுகள் மனித சமூகத்தை முன்மாதிரிமிக்க சமூகமாக வாழ வழிகாட்டுகின்றன” ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துக.

*******

## UNIVERSITY OF PERADENIYA
## පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
### CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
### දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
### GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015
### ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2015
### ISLAMIC CULTURE III/ ඉස්ලාම් සංස්කෘතික III - ( ICG III)
### (Muslim Sciences and Fine Arts)

இவ்வினாத்தாளில் மொத்தம் **08** வினாக்கள் உள்ளன. எவையேனும் ***ஐந்து*** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். எழுத்து தெளிவில்லாவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

நேரம்: மூன்று (03) மணித்தியாலம்

---

01. "மனித நாகரிகத்துக்கு அடிப்படையாக இருக்கும் தற்கால விஞ்ஞான முன்னேற்றத்திற்கும் அதன் வியப்பூட்டும் கண்பிடிப்புகளுக்கும் அத்திவாரம் அமைத்தவர்கள் மத்தியகால முஸ்லிம்களே". ஆராய்க.

02. கணிதவியல் முஸ்லிம்களின் விருப்புக்குரிய துறையாக விளங்கியமைக்கான காரணிகளைக் குறிப்பிட்டு, அதற்குப் பங்களிப்புச் செய்த இரு முஸ்லிம் கணிதவியலாளர் பற்றி மதிப்பீடொன்று தருக.

03. அப்பாசிய ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் வானவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்பை ஆராய்க.

04. இசை தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டைக் குறிப்பிட்டு மத்திய காலப்பகுதியில் அதன் வளர்ச்சி பற்றி ஆராய்க.

05. முஸ்லிம்களிடமிருந்து விஞ்ஞானக் கலைகள் வீழ்ச்சியடைய வழிவகுத்த காரணிகளை விளக்குக.

06. இஸ்லாமிய வரலாற்றுக் கலையின் தோற்றம், வளர்ச்சி, அதன் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறுக.

07. முஸ்லிம்களை அதிகம் ஈர்த்த எழுத்தணிக் கலையின் தோற்றம், வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுக.

08. பின்வரும் இரண்டிற்குவிளக்கம் தருக.

    1. அழகியலும் இஸ்லாமும்
    2. ஆரம்பகால முஸ்லிம்களின் கலாநிலையங்கள்
    3. விஞ்ஞானத் துறையில் அல்குர்ஆன் வகிக்கும் முக்கியத்துவம்
    4. உமையாக்களின் கல்வித் துறைப் பங்களிப்புகள்

************